2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு மிக முக்கியமான மானியக் கோரிக்கை. மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் பேச வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுக்கக் கோரும் கவன ஈர்ப்புகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.* Please sit down.

3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் சிலை அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-00

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய கவிஞர்களில் ஒருவராக விளங்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். கவிமணியின் பாடல்களில் உண்மையும், அழகும் கைகோர்த்துச் செல்வதை உணர முடியும். கவிமணி அவர்களை "இனிமைக் கவிஞர்", "இளமைக் கவிஞர்", "உண்மைக் கவிஞர்", "உணர்ச்சிக் கவிஞர்" எனக் கூறுவது சாலப் பொருத்தமாக அமையும்.*

"தேசிக விநாயகத்தின் கவிப் பெருமை தினமும் கேட்பது எனது செவிப் பெருமை" எனக் கூறியவர் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

இவரது உண்மையுள்ளம், உண்மைப் பாடல்களின் மூலமாய் உண்மை வித்துக்களைக் கற்பவர் மனதில் விதைத்து, உண்மைப் பயிரை செழித்தோங்கச் செய்கிறது; இவர் பாடல்களில் காணும்

தெளிவும், இனிமையும், இவரது உள்ளத்திலேயுள்ள தெளிவு, இனிமை முதலிய சிறந்த இயல்புகளின் நிழற்படமேயாகும் என்று புகழாரம் சூட்டியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

கவிமணி அவர்கள் வாழ்ந்த நாஞ்சில்நாடு மலையாள நாட்டின் ஒரு பகுதியாக இருந்தாலும், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்று கவி புனையும் ஆற்றலைப் பெற்றிருந்தார். பழந்தமிழ்ப் பண்பும், தமிழ் மணமும், புதுமைக் கருத்துகளும் நிறைந்த பல பாடல்களைக் கவிமணி அவர்கள் எழுதியுள்ளார். இப்பாடல்களின் தொகுப்பான "மலரும் மாலையும்" நூலில் இருந்து, இவருடைய நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இறை வழிபாடு, சாதி பேதம் கடிதல் மற்றும் குழந்தைகளிடம் கொண்ட பற்று ஆகியவற்றை அறியலாம்.

"பெற்ற சுதந்திரத்தை பேணிக் காப்பது நமது கடமை" என்றும், "உரிமை வாழ்வின் பயனை நினையாது வாதினை விளைவித்துச் சண்டை செய்வது தேவையற்றது" என்றும் வலியுறுத்தியவர் கவிமணி அவர்கள்.

குழந்தைகளுக்காக தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்களையும், குழந்தைகள் தாமே பாடி மகிழத்தக்க எளிய, அழகிய பாடல்களையும் பாடியுள்ளார். பறவைகளைப் பற்றி குழந்தைகள் விளித்துப் பாடும் இவரது பாடல்கள் சுவை மிக்கவை.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் தித்திக்கும் பாடல்கள் நமது செவிகளுக்கு என்றும் திகட்டாத இன்பம் தரக்கூடியவை.

இப்படிப்பட்ட தலைசிறந்த தமிழ் கவிஞரை, தமிழ்ப் பற்றாளரைப் போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் சிலை வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கும்மிடிப்பூண்டி, ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன எண்ணிக்கை உயர்வினால் அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தவிர்க்கும் வகையில்,